# இராப்போஜனத்தின் அறிவித்தல்

*"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26).*

கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளில் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கையில் மிகவும் தனிச்சிறப்பான விஷயம் இடம் பெறுகிறது. அது இயேசுவின் மரணத்தை அறிவிப்பதற்கென்று சபையார் யாவரும் ஒன்றிணையும் நேரமாக உள்ளது! பவுல், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதொல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்'' என்று கூறினார். இந்த உண்மையின் அடிப்படையில், இந்த நிகழ்வு எவ்வளவு பரிசுத்தமானதாக இருக்க வேண்டும்!

அப்பத்திலும் பாத்திரத்திலும் நாம் பங்கேற்கையில், நாம் இயேசுவின் மரணத்தை - நினைவுகூருதலினால் அதை - அறிவிக்கிறோம். நமது இரட்சிப்பிற்காக அவரது சரீரத்தின் பலியையும் அவரது இரத்தம் ஊற்றப்படுதலையும் விசுவாசத்தின் கண்கள் மூலமாக நாம் பற்றுகிறோம். இந்தக் கருத்தில் இராப்போஜனம் *ஒரு ஆழ்ந்த சிந்தனை நிறைந்த நினைவுகூருதலாக உள்ளது.*

இத்துடன் கூடுதலாக, நாம் இதை கடைப்பிடிக்கும்போது, நாம் கிறிஸ்துவின் பிரசன்னத்திற்குள் ஒரு விசேஷித்த வகையில் பிரவேசிக்கிறோம். நாம் அவருடன் ஐக்கியமாக இதை உண்ணுகிறோம் (காண்க மத்தேயு 26:29). இந்த சத்தியத்தில் நாம் தனிப்பட்ட வகையிலான ஒரு *ஐக்கிய விருந்தை*, கிறிஸ்துவுடனான உள்ளான மற்றும் நிகழ்கால இணைவைக் காணுகிறோம். கிறிஸ்துவுடன் ஒரு ஆச்சரிய விதமான ஐக்கியத்தை நாம் அனுபவிக்கிறோம்.

மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஒவ்வொரு ஆசரிப்பும், அவர் மீண்டும் வருமளவும் அவருடைய மரணந்தைப் பல்வேறு வழிகளில் அறிவிக்கிறது. நாம் அவரது மரணத்தை நினைவுகூருவதை பொதுப்படையாகத் தேர்ந்துகொள்வதன் மூலம் இயேசுவின் கட்டளையின்படி செயல்படுகையில், நாம் ஒரு *சமூக அறிக்கையிடுதலில்* இணைந்து கொள்கிறோம். அவரது மரணம் நம்மை நமது பாவங்களில் இருந்து மீட்கிறது என்று நாம் நம்புவதை இந்த உலகத்திற்கு முன்பாக அறிக்கை இடுகிறோம். எஞ்சியுள்ள காலம் முழுவதிலும், உலகமெங்கும் உள்ள விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்கள் - ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் இந்த இராப்போஜனத்தில் பங்கேற்பதினால் - தங்களுக்காக இயேசு மரித்ததை உறுதிப்படுத்துவார்கள். இராப்போஜனம் என்பது இயேசுதாமே, தமக்காக இந்த உலகத்தில் விட்டுச் சென்ற சாட்சியங்களில் ஒன்றாக உள்ளது.

"அறிவித்தல்'' என்ற வார்த்தை, சிறப்பாக அறிவுறுத்துதலாக உள்ளது. அது வாய்மொழி அறிவிப்பின் தனித்தன்மையைக் கொண்டுள்ளது. நமது ஜெபங்களில், அதன் நோக்கத்திலான நமது உச்சரிப்பில், மற்றும் நமது அமைதியான, பயபக்தியான நினைவுகூருதலில், நாம் கர்த்தருடைய மரணத்தை அறிவிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய எப்போதுமே, “அறிவித்தல்” என்ற வார்த்தை சுவிசேஷத்துடன் தொடர்புடைய வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராப்போஜனத்தில் பங்கேற்பதன் மூலம் கிறிஸ்தவர்கள் அறிவிப்பது என்ன? ஒரு கருத்தில் நாம், அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோம். இவ்வசனத்திற்குப் பரிசுத்த ஆவியானவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்கால வினைச் சொல்லானது, தொடர்ச்சியாகச் செய்யப்படுதலின் பண்பைத் தன்னுடன் கொண்டுவருகிறது. அறிவித்தலானது, காலம் முடிவுபெறும் வரையிலும், ஆண்டுகள் தோறும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும். நாம் இந்த இராப்போஜனத்தில் உண்ணும்போதெல்லாம், இந்த அறிவித்தல் வெளிச்செல்லுகிறது. இது மூன்று திசைகளில் நகர்ந்து செல்கிறது.

## நமது சொந்த இருதயங்களுக்கு

*நாம் இதை நமது சொந்த இருதயங்களுக்கு அறிவிக்கிறோம்.* இந்த இராப்போஜனத்தை உண்பதில் நாம், இயேசுவின் சரீரமும் இரத்தமும் நமது இரட்சிப்பை முயன்று பெற்றது என்பதை நமக்கு நாமே நினைவூட்டுகிறோம். இதைக் கடைப்பிடித்தலானது சரீரப்பிரகாரமானதைக் காட்டிலும் அதிகம் மனரீதியானதாக உள்ளது. அவரது பலி மற்றும் பரிகாரம் ஆகியவற்றைப் பற்றி *நினைப்பதற்காக* நாம் அப்பத்திலும் திராட்சரசத்திலும் பங்கேற்கிறோம். உண்ணுதல் மற்றும் குடித்தல் ஆகியவற்றில் தாங்கி நிலைநிறுத்தப்படுதல் எதுவும் இருப்பதில்லை; ஆனால் இதை, கீழ்ப்படிதலின் ஒரு செயலாக நினைவுகூருதல் என்பது, புதுப்பிக்கப்பட்ட பாராட்டுதலையும், ஆவிக்குரிய உணவையும் தெய்வீக ஐக்கியத்துவத்தையும் நமக்குக் கொண்டு வருகிறது.

## ஒருவர் மற்றவரின் இருதயங்களுக்கு

*நாம் இதை ஒருவர் மற்றவரின் இருதயங்களுக்கு அறிவிக்கிறோம்.* இந்த இராப்போஜனம் சபையின் செயல்பாடாக, தேவனுடைய பிள்ளைகள் ஒன்றிணைந்து பங்கேற்கும் நிகழ்வாக உள்ளது. இந்த செயல்பாட்டில், இயேசுவின் ஆவிக்குரிய சரீரமானது (சபை) அவரது இயல்பான சரீரத்தையும் சிலுவையில் அவர் ஒப்புக்கொடுத்த ஆவிக்குரிய பலியையும் நினைவுகூருகிறது. நமது ஆராதனை உள்நோக்கியும், வெளிநோக்கியும், மேல்நோக்கியும் செல்கிறது. நாம் நமக்கும், ஒருவர் மற்றவருக்கும், நமது இரட்சகரிடத்திலும் மற்றும் நமது தேவனிடத்திலும் பேசுகிறோம். நாம் ஒருவருக்கொருவர், “இயேசு எனக்காக மரித்தார் என்று நான் விசுவாசிக்கிறேன், மற்றும் அவர் தமது மரணத்தின் மூலமாக நம்மைத் தமது சரீரத்திற்குள் ஒன்றாகக் கொண்டுவந்திருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்” என்று அறிவிக்கிறோம்.

## கிறிஸ்தவர் அல்லாதவர்களின் இருதயங்களுக்கு

*நாம் கர்த்தரின் மரணத்தை கிறிஸ்தவர் அல்லாதவர்களின் இருதயங்களுக்கு அறிவிக்கிறோம்.* இயேசு இந்த உலகத்தின் மீட்பராக இருக்கிறார் என்று பாவிகளுக்குத் தொடர்ந்து நினைவூட்டுவதற்கு இந்த இராப்போஜனம் ஒரு வழிவகையாக உள்ளது. அவரது இராப்போஜனம் சபைக்கும் இந்த உலகத்திற்கும்

ஒரு நினைவுச்சின்னமாக உள்ளது. இராப்போஜனம் கடைப்பிடிக்கப்படும் ஒவ்வொரு வேளையிலும், அதைப் பார்ப்பவர்களுக்கு அல்லது அதைப் பற்றி அறிந்தவர்களுக்கு அவரது மரணம் அறிவிக்கப்படுகிறது. வாரத்தின் முதல்நாளில் அது கடைப்பிடிக்கப்படுதலானது, அவர் மறுபடியும் வருமளவும் அவரது மரணத்தைத் தொடர்ந்து விசுவாசத்துடன் அறிவிக்கும்.

## முடிவுரை

இயேசு தமது அப்போஸ்தலர்களிடத்தில், அப்பத்தை உண்டு திராட்ச ரசத்தைப் பருகி தமது மரணத்தை நினைவுகூரும்படி கேட்டுக்கொண்டபோது, அவர் தமது மரணம் நடைபெற இருந்தது பற்றி அறிவித்துக் கொண்டிருந்தார். அவரது செயல்பாடுகள் வெளிப்படுத்துபவையாகவும் முன்னெதிர் நோக்குபவையாகவும் இருந்தன. நாம் கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கேற்கையில், நாம் அவரது மரணத்தை, எல்லா உண்மைகளிலும் மாபெரியது என்ற வகையில் அறிவிக்கிறோம். அவர் அனுபவித்த வரலாற்றுரீதியான மரணத்தை நாம் பின்னோக்கிக் காணுகிறோம். நாம் அதை ஆசரிக்கும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் நாம் கர்த்தரின் மரணத்தைக் காண்பிக்கிறோம்.

---

*"அவருடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (நடபடிகள் 2:41, 42).*

*"கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை (என்ற சொற்றொடர்) ... இராப்போஜனத்தின் மூன்று வலியுறுத்தங்களை உள்ளடக்குகிறது. மரணம் என்பது சுவிசேஷத்தின் அஸ்திபாரம் என்று கருதப்படுவதும் புதிய உடன்படிக்கை நிலைநாட்டப்படும் வழிவகையாகவும் இருந்த, கிறிஸ்துவின் சிலுவை மரணமாக உள்ளது. கர்த்தர் வருமளவும் என்பது கிறிஸ்தவர்களின் (எதிர்கால) நம்பிக்கையை கண்ணோக்குகிறது. கர்த்தர் என்பது கிறிஸ்துவின் ஜீவனுள்ள கர்த்தத்துவத்தை வலியுறுத்துகிறது."*[1]

---

குறிப்பு

[1]Fred Fisher, *Commentary on 1 & 2 Corinthians* (Waco, Tex.: Word Books, 1975), 187.